முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1018

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.07.2022, புதன்கிழமை

1. கலியுக சித்தே அரங்கா போற்றி
கருணைவடிவாக வந்த தேசிகா போற்றி
பெருமைமிக்க அரங்கன் உந்தனுக்கு
புகலுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை சுபகிருது மிதுன திங்கள்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 29 நாள், 13.07.2022 புதன்கிழமை)
அருளுவேன் அரங்கனுக்கு பலம் கூட்ட
வாசி வென்ற ஞானியர்கள் படைகளெல்லாம்
வலம் வந்து அரங்கனோடு துணையாய் நிற்க
3. ஆசி தந்து ஆறுமுகன் யானும்
அரங்கனுக்குள் சக்தியாக இணைந்துள்ளேன்
உள்ளபடி அரங்கனே கலியின் சிறந்த ஞானி
உயர்வான அரங்கன் தர்மமே கலியுகத்தை மீட்கும் மாதர்மமாகும்
4. ஆகவே அரங்கன் தர்மத்தை
ஐயமற உலகோர் அன்னதான கிளைகளாக துவக்கி
பெருமைபட உலகமெங்கும் செய்ய
பேருலகமே தர்மலோகமாகி
5. ஆகியே அரங்கன் ஆசிபடஅகிலம் ஞான யுகமாற்றம் வரும் உலகில்
ஆறுமுகன் என்னருளால் காணக்கூடும்
கூடவே அரங்கனுக்கு சக்தியூட்டும்
குறையில்லா பிரணவக்குடில் தன்னில்
6. தன்னிலே உலகோர்கள் ஒன்றிணைந்து
தக்கதொரு ஞானிகள் பூஜைசெய்து
தவராஜன் என் சூட்சுமமாய் இருக்க
இருக்கவே அரங்கனிடம் தீட்சை ஆசி பெற
7. அனைவருக்கும் ஞான சித்தி உறுதியாகும்
அரங்கனுள் யான் இருந்து
இந்த அற்புதத்தை நடத்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–